2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக நிறுவனத் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். எங்களையெல்லாம் வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம், கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். நேற்றையதினம் சட்டமன்றத்தில் விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களைப் பாராட்டி மக்கள் பட்டாசுகள் வெடித்து, இனிப்புகளைக் கொடுத்து கொண்டாடினார்கள். அதற்காக மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமின்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களைப் பார்க்கின்றபோது, 2021 சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும்; இரண்டாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்கவிருக்கும் தமிழகத்தின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடன் இணைந்து பணியாற்றிவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியிலுள்ள குன்றத்தூர், மாங்காடு ஆகிய இரண்டு பேரூராட்சிகளும் சென்னையை ஒட்டியுள்ள பேரூராட்சிகளாக இருக்கின்றன. எனவே, அங்கு பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வரும்படி ஏற்கெனவே நான் இங்கு பதிவு செய்திருக்கின்றேன். அந்த இரண்டு பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2021 பிப்ரவரி 27

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி பாதாள சாக்கடைத் திட்டம் குறித்த கோரிக்கை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

45—

நெல் கொள்முதல் நிலையம்

***52595—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, ஆலத்தூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகிற தெய்வம், என்னை வாழ வைத்த தெய்வம், அம்மா அவர்களை வணங்குகிறேன். 2001–ல் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் என்கிற வாய்ப்பினை வழங்கி, அதற்குப் பின்னால், 2011, 2016 ஆகிய இரண்டு சட்டமன்றத் தேர்தல்களிலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக அறிவித்து, சட்டமன்ற உறுப்பினராக என்னை உருவாக்கி, இரண்டு முறையும் உணவுத் துறை அமைச்சர் என்கிற வாய்ப்பை வழங்கிட்ட என்னுடைய தெய்வத்திற்கு பதினைந்தாவது பேரவையின் சட்டமன்றக் கூட்டம் முடிகிற இந்த நாளில், என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பின்னாலே, இந்த ஆட்சி நீடிக்குமா, நிலைக்குமா என்கிற எத்தனையோ கேள்விகளுக்கிடையே, இந்த ஆட்சி நிலைக்கும், நீடிக்கும்; 5 ஆண்டுகள் நிறைவு செய்யும் என்கிற உறுதிப்பாட்டோடு இன்றைக்கு ஆட்சியை நிறைவு செய்து கொண்டிருக்கிறார் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள். விவசாயிகளுடைய இன்றைய சூழ்நிலையை மனதிலே கொண்டு, விவசாயிகளை எல்லா வகையிலும் பாதுகாத்து, காவேரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து, வரலாற்றுச் சாதனை படைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் 'காவேரி காப்பாளர்' என விவசாயச் சங்கப் பிரதிநிதிகளால் அன்போடு அழைக்கப்படுகிறார். இன்றைக்கு விவசாயிகள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்ற அனைத்து பயிர்க் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்து, விவசாயிகளுடைய முதலமைச்சராக, அனைத்துத் தரப்பு மக்களுடைய, சாதாரண மக்களுடைய முதலமைச்சராகத் திகழ்ந்து கொண்டிருக்கக்கூடிய காவேரி காப்பாளர், எனது அருமைக்குரிய அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.

அதைப்போல, அவருக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருந்து, தொடர்ந்து நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், இடைக்கால நிதிநிலை அறிக்கைகளையும் தந்து, தன்னுடைய அனுபவத்தால் எல்லோரிடமும் அன்பாகப் பழகக்கூடிய அருமைக்குரிய அண்ணன், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களை வணங்குகிறேன். அதைப்போல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கேயிருக்கிற பத்திரிகையாளர்கள், அதிகாரிகள், அலுவலர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு எனக்கு இந்த அவைக்கு வந்து பேசும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இந்த பதினைந்தாவது பேரவையின் அலுவல்கள் முடியப் போகிற கடைசி நாளில் உறுப்பினரின் கேள்விக்குப் பதில் சொல்கிற இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் இந்த நேரத்தில் ஒன்றை எண்ணிப் பார்க்கிறேன். கடந்த மாதம் 19 ஆம் தேதி என்னுடைய உடல்நிலையை எண்ணிப் பார்க்கிறபோது, நான் மீண்டும் இந்த அவைக்கு வருவேனா என்கிற நிலையிலேதான்

என்னுடைய உடல்நிலை இருந்தது. அந்த அளவிற்கு மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு, "இந்த காமராஜினுடைய உயிர் உடலிலே இருக்கிறதா?" என்கிற நிலையில்தான் நான் இருந்தேன். நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, நான் மறுபிறவி எடுத்து, இந்த அவையிலே உங்கள் முன்பாகப் பேசுவதற்கு வந்திருக்கிறேன். அத்தகைய ஒரு வாய்ப்பை எனக்கு வழங்கியிருக்கிற இறைவனுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் கடந்த மாதம் 5 ஆம் தேதி கொரோனா தொற்றுநோயினாலே பாதிக்கப்பட்டேன். அதற்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்த பல்வேறு பணிகளை எனக்குக் கொடுத்திருந்தார். அந்தப் பணிகளையெல்லாம், அவர் எப்படிச் சொன்னாரோ, அதைப்போல செய்து முடித்து, ஒரு சகோதரனாகச் செயலாற்றிக் கொண்டிருந்த நிலையில், எப்படியோ கடந்த மாதம் 5 ஆம் தேதி கொரோனா தொற்றுநோயினாலே நான் பாதிக்கப்பட்டேன். அந்தச் சூழ்நிலையில், மீண்டும் இரண்டாவது முறையாக கடந்த மாதம் 19 ஆம் தேதி மிகப் பெரிய அளவில் கொரோனா நோய்த் தொற்று என்னை பாதிப்புக்குள்ளாக்கிவிட்டது. நான் கொரோனா நோயினால் பாதிப்புக்குள்ளான அன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே இருந்தார்கள். மாண்புமிகு நம்முடைய அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேரும் அலறித் துடித்துக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்து நிலைமையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அன்றைக்கு காமராஜ் ஆகிய நான், மருத்துவமனைக்கு உயிரோடு செல்கிறேனா அல்லது உயிரற்ற சடலமாகச் செல்கிறேனா என்கிற நிலையில், ஆம்புலன்சிலே சென்று கொண்டிருந்தேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்னிடத்திலே இந்த நிகழ்வைப் பிறகு சொன்னார்கள். "மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே இருக்கிறார்கள். அவரைத் தொடர்புகொண்டேன். சிரமமாக இருக்கும்போல் இருக்கிறதே என்று நான் அண்ணன் அவர்களிடத்திலே சொன்னபோது, 'காமராஜ் அவர்கள் பிழைத்துக்கொள்வார்' என்று சொல்லி, அவரைப் போய்க் காப்பாற்றுங்கள்; நான் வந்துகொண்டே இருக்கிறேன்; அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுங்கள் என, அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டார், மாண்புமிகு

2021 பிப்ரவரி 27]

முதல்வர் அவர்கள்" என்று சொன்னார். பிறகு டெல்லியிலிருந்து நேரடியாக மருத்துவமனைக்கு அலறித் துடித்துக் கொண்டு வந்தார் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள். அதைப்போல, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் உடனடியாக மருத்துவமனைக்கு வந்து, என்னைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய வேலைகளைப் பார்த்தார். அந்தவகையில், என்னுடைய உயிரை இன்றைக்கு இந்த அவையிலே நிலைநிறுத்தி வைத்திருக்கக்கூடிய என்னுடைய அருமைக்குரிய அண்ணன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல கடந்த 10 ஆண்டுக் காலமாக, 5 ஆண்டுக் காலமாக, அருமைக்குரிய அண்ணன்மார்களாகவும், சகோதரர்களாகவும், என்னுடைய குடும்பத்தில் ஒருவராகவும் இருந்து, என்னோடு பணியாற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை அவரவர் பாதங்களிலே வைப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய சந்ததியே உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது என்பதனையும் இந்த நேரத்திலே நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். எனது அருமைக்குரிய சகோதர, சகோதரிகளுக்கு மீண்டும், மீண்டும் என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உடனடியாக துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.*

திரு. C.V. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எளிமையும், இனிமையும் நிறைந்த, விவசாயிகளின் உற்ற நண்பனாக, தோழனாக, சகோதரனாக விளங்கும், தமிழகத்திலுள்ள அத்தனை விவசாயப் பெருமக்களும் தங்களுடைய குடும்பத்தில் ஒருவராகப் பார்க்கக்கூடிய தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன்.*

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், தங்களையும் வணங்குகிறேன். இன்றைக்கு இந்த அவைக்கு வந்து, மிக உணர்வுப்பூர்வமாக தன்னுடைய நிலையை இந்த அவைக்கு தற்போது எடுத்துச் சொல்லி, ஒரு புதிய ஜென்மம் எடுத்து, பதினைந்தாவது பேரவையின் கடைசிக் கூட்டத் தொடரில் இந்தத் துறையின் கடைசி கேள்வியான என்னுடைய கேள்விக்குப் பதிலுரைக்க வருகைதந்த மாண்புமிகு அண்ணன் உணவுத் துறை அமைச்சர் அவர்கள், நீண்ட நெடிய காலம் வாழ்ந்து, இந்தத் தமிழ் மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற என்னுடைய அவாவையும், வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டத் தொடரில் என்னுடைய கடைசி கேள்வி இது. இங்கேயிருக்கிற அத்தனை மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது உடன்பிறவா சகோதரர்களான அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதி, குளவஞ்சி கிராமத்திலே இதைப்போல ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியைச் சேர்ந்த குளவஞ்சிப் பகுதியிலே நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கை உடனடியாக துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.

2021 பிப்ரவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய திருவடிகளை வணங்குகிறேன். அம்மாவினுடைய நல்லாசியோடு, இன்றைக்கு தமிழகத்தை வழிநடத்தும், அன்பு நிறைந்த, பண்புகள் நிறைந்த முதல்வர்; இந்திய வரலாற்றிலே இடம்பெறுகின்ற வகையில், இன்றைக்குத் தமிழ் திருநாட்டிலே குடிமராமத்துத் திட்டத்தின் மூலமாக பல பணிகளைச் செய்து, விவசாயிகளுடைய துயரைத் துடைக்கின்ற வகையிலே, 5 இலட்சம் விவசாயிகளுக்கு 600 கோடி ரூபாயை, வெள்ள நிவாரண நிதியை வழங்கியிருக்கிறார். அதோடு, விவசாயப் பெருமக்களுடைய கஷ்டங்களை அறிந்து, தானும் ஒரு விவசாயி என்ற முறையிலே, 16,43,000 விவசாயிகள் பயன்பெறும் வகையில், 12,110 கோடி ரூபாய் அளவிற்கு அவர்களது பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்தும், கூட்டுறவு நிறுவனங்களில் 6 பவுன் வரை அடமானம் வைத்து பெற்ற நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்றும் நல்ல செய்திகளைத் தந்துள்ளார். அதோடு, தமிழக மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு, குறிப்பாக மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்கின்றேன் என்ற அறிவிப்பையும், வெளியிட்டுள்ளார்.*

முற்பகல் 10–35

மேலும், அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் வயது வரம்பை 60 ஆக உயர்த்தியும் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, தமிழக மக்களுடைய குறிப்பாக வன்னிய மக்களுடைய கோரிக்கையை ஏற்று, நீண்ட காலமாகப் போராடுகின்ற அந்த வன்னிய மக்களுடைய கோரிக்கைக்கு செவி சாய்க்கின்றவகையில், நேற்றையதினம் அவர்களுக்கு 10.5 சதவிகித உள் இட ஒதுக்கீட்டை அளித்து, அந்த மக்களுடைய நன்மதிப்பையும் பெற்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, மாணவச் செல்வங்களுடைய அன்பைப் பெறுகின்ற வகையில், அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். "எங்களுக்கெல்லாம் வாக்குரிமை இருந்தால், நாங்கள் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்குக் கண்டிப்பாக ஓட்டு போடுவோம்"

என்கின்ற செய்தியை மாணவச் செல்வங்கள் WhatsApp செயலி மூலமாகப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போற்றுதலுக்குரிய, வணக்கத்திற்குரிய, சரித்திரம் படைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழகத்திலே இருக்கின்ற 8 கோடி தமிழ் மக்களுடைய அன்பைப் பெற்றிருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே இன்றைக்கு சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பத்தினர் அத்தனை பேருடைய அன்பையும் பெற்றிருக்கின்றார்கள். அந்தவகையில், அன்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். அவருக்கு உறுதுணையாக இருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கருணையாலே, இந்த பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். அப்படி மக்கள் பணியாற்றுகின்ற வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கருணையால், இன்று இந்தச் சபையில் பேசுகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். அந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியினைக் காணிக்கையாகச் செலுத்தி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே எங்களையெல்லாம் அரவணைத்துச் செல்கின்ற, மாட்சிமை பொருந்திய, மாண்புகள் நிறைந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். இன்று பேரவைக் கூட்டத்தின் இறுதி நாள். நான் சார்ந்திருக்கின்ற செய்யாறு தொகுதி மக்களுடைய நலனுக்காக இந்த இறுதி வினாவை எழுப்புகிறேன்.

செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியம், வீரம்பாக்கம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், தான் கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டது குறித்த தன்னுடைய கஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். இறைவனுடைய